

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம், இராஜா அண்ணாமலைபுரத்தில் நடைபெற்ற காஞ்சிபுரம் பிரகாஷ் சில்க்ஸ் & சாரிஸ் கே.டி. பிரகாஷ் சா – பி.லட்சுமி பாய் இணையரின் புதல்வர் கே.பி.ஸ்ரீனிவாஸ் சா – காஞ்சிபுரம் பி.எம்.கே. சாரிஸ் பி.எம்.கே.வி. விக்னேஷ்வர் சா – வி.நிவேதா பாய் இணையரின் புதல்வி வி.ஸ்ரீநிதிபாய் ஆகியோரது மணவிழா வரவேற்பில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் திருமதி. துர்கா ஸ்டாலின், முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



சட்டமன்ற கூட்டத்தொடர் நிறைவடைந்த நிலையில் – கழகத் தலைவர் – முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜீ. வி.மார்க்கண்டேயன் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம், புதுச்சேரி மாநிலம் தட்டாஞ்சாவடி சட்டப்பேரவை தொகுதி இடைத் தேர்தலில் கழக வேட்பாளராக அறிவிக்கப்பட்ட சேது (எ) சேது செல்வம் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அதுபோது புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா.சிவா, புதுச்சேரி மாநில சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ஏ.எம்.எச்.நாஜிம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



புதுச்சேரி மாநிலம், தட்டாஞ்சாவடி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில், கழகத்தின் வெற்றி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள சேது (எ) சேது செல்வம், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் – கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது, புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா, புதுச்சேரி சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் ஏ.எம்.ஹெச்.நாசீம், மாநில துணை அமைப்பாளர் ஹனிபால் கென்னடி, பாகூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.ஆர்.செந்தில்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், கழகத்தின் வெற்றி வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கும் வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் இ.பரந்தாமன், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் – கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் அப்துல் மாலிக் ஆகியோர் உடனிருந்தனர்.

### முதல்வர் விஜயின் ஆணவப் பேச்சைக் கண்டித்து

# விருதுநகர் தெற்கு - வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் – தங்கம் தென்னரசு அறிக்கை!

விருதுநகர், செப். 11 –

விருதுநகர் தெற்கு – வடக்கு மாவட்டக் கழக செயலாளர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் , தங்கம் தென்னரசு ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சட்டமன்ற கூட்டத் தொடரில் முதலமைச்சர் விஜயின் ஆணவப் பேச்சைக் கண்டித்து நாளை (12.09.2026 – சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் விருதுநகர், மாரியம்மன் கோவில் திடலில், விருதுநகர் தெற்கு/வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.





இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள்/நிர்வகாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள்/ தோழர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

---

### 13 ஆம்தேதி – சிவகங்கை மாவட்ட மகளிரணி அமைப்பாளர்

# திருமதி பவானி கணேசன் இல்லத் திருமணம்!

## கே.ஆர். பெரியகருப்பன் தலைமை! எஸ்.ரகுபதி–தங்கம் தென்னரசு–ஹெலன் டேவிட்சன்–நாமக்கல் ப.ராணி பங்கேற்பு!

*சிவகங்கை, செப். 11 -*

சிவகங்கை மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் மு.செ.க. கணேசன் இவர்களது மகன் மு.செ.க. எழில் மாறன் அரியலூர் தாலுகா பிலா குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த க. செந்தில்குமார் செ.பரிமளா ஆகியோர் மகள் செ.செல்வப்பிரியா ஆகியோர் திருமணம் வருகிற 13ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை சிவகங்கை தாலுகா ஒக்கூர் அண்ணா நகரில் மணமகன் இல்லத்தில் நடைபெறுகிறது. முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர் கே ஆர். பெரிய கருப்பன் தலைமை தாங்கி மணவிழாவினை நடத்தி வைக்கிறார். மணவிழாவிற்கு முன்னாள் அமைச்சர்கள் எஸ். ரகுபதி. எம்.எல்.ஏ .தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ. மு. தென்னவன், கவிஞர் ராஜாத்தி சல்மா ரொக்கையா எம்.பி. மாநில ஊடகத்துறை இணைச் செயலாளர், மகளிர் அணி செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். சிவகங்கை வடக்கு ஒன்றிய செயலாளர் திருமலை முத்துராமலிங்கம் வரவேற்று பேசுகிறார் மணமக்களை வாழ்த்தி முன்னாள் எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், சுப .துரைராஜ், சுப.மதியரசன், எஸ் மாரியப்பன் கென்னடி ,. வே.ராஜசேகரன், மாநில கழகச் செய்திதொடர்பு துறை இணைச்செயலாளர் மருது அழகராஜ், முன்னாள் எம்.பி.திருமதி பவானி ராஜேந்திரன், கே .ஆர் .அசோகன்,

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ, சிவகங்கை தெற்கு ஒன்றிய செயலாளர் மா .ஜெயராமன், செயற் குழு உறுப்பினர் தா. ராமையா வழக்கறிஞர் இன்பநாதன் தி.க மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் சிவகங்கை மேற்கு ஒன்றிய செயலாளர் பெ.மந்த காளை, தலைமை கழக பேச்சாளர் சேலம் சுஜாதா, மருத்துவர் ப.பி. யாழினி புதுக்கோட்டை விஜயா, நடிகர் சேது கருணாஸ்,

முன்னாள் மத்திய இணை அமைச்சர் இ.எம். சுதர்சனநாச்சி யப்பன், முன்னாள் எம்.எல்.ஏ. எஸ். குணசேகரன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள். மணவிழாவில் மாவட்ட ஒன்றிய ,நகர ,பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள். மணவிழா ஏற்பாடுகளை திருமதி லட்சுமி செல்லமுத்து, திருமதி பவானி கணேசன், மு.செ.க. கணேசன், மகள் மு.செ.க. எழில் நிலா, மருமகன் வழக்கறிஞர் திருமதி பி. ரோகித் ராஜ் ஆகியோர் செய்து வருகிறார்கள் .

---

### இதுவரை ரூ.6 கோடியே 55 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 55 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 10-09-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | எம். கதிரேசன், அ.நா. மங்கலம், அஞ்சல்,<br>காரிப்பட்டி, சேலம் மாவட்டம். | 25,000/–– |
| 2. | ரா.ராஜேந்திரன், விளந்தை, ஆண்டிமடம்,<br>அரியலூர் மாவட்டம். | 25,000/– |
| 3. | ஜே. பத்மநாதன், ரங்கநாதபுரம், கிருஷ்ணராயபுரம்,<br>கரூர் மாவட்டம். | 25,000/– |
| 4. | மு.மோகன், அன்னை சத்யா நகர்,<br>ஆலாம்பாளையம் பேரூர், நாமக்கல் | 25,000/– |
| 5. | ஆர்.தங்கவேல், பையர்நாயக்கன்பட்டி அஞ்சல்,<br>அரூர், தருமபுரி மாவட்டம். | 25,000/– |
| 6. | எம். கிருஷ்ணன், வீரன்வட்டம் கிராமம்,<br>ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டம். | 25,000/– |
| 7. | திருமதி ஆர்.சரண்யா, நேரு நகர் கிழக்கு,<br>விமானநிலையம் அஞ்சல், கோவை | 25,000/– |
| 8. | க.கா.சுப்பிரமணியம், கரட்டுப்பாளையம் அஞ்சல்,<br>நம்பியூர் வட்டம், ஈரோடு | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |